[*1995 ஏப்ரல் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 339, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

339—

ஆதிதிராவிடர் நல விடுதி அமைத்தல்

***24589—டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி வட்டம், அகரம் சேரியில் ஆதிதிராவிட பெண்கள் விடுதி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், அகரம் சேரியில் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி அமைப்பது குறித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் அறிக்கை பெற்று தேவை மற்றும் நிதிநிலைக்கு ஏற்ப, வரும் ஆண்டுகளில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-20

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்தில் மட்டும் தாழ்த்தப்பட்ட மக்களை ஓட்டுக்காக சந்திக்கிற சில தலைவர்கள் மலிந்துள்ள இந்த நாளில் எப்போதுமே ஆதிதிராவிட மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்துகின்ற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் பேரணாம்பட்டு தொகுதிக்கு பத்திரபள்ளி அணைத் திட்டம் போன்ற பல நல்ல திட்டங்களை தந்தமைக்காக நன்றியைச் சொல்லி, தாழ்த்தப்பட்ட மக்கள் புரட்சித் தலைவியிடம் நன்றியோடு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, டாக்டர் புரட்சித் தலைவியை நீங்கள் நன்றாக இருக்கவேண்டும், நாடு முன்னேற, ஏழை மக்கள் வாழ்வு முன்னேற என்று வாழ்த்துகிறார்கள். ஆனால் டாக்டர் புரட்சித் தலைவியோ தன்னைப் பற்றிக் கவலைப்படாமல் மக்கள் வாழவேண்டுமென்று உழைக்கிறார்கள் என்று சொல்லி, தாழ்த்தப்பட்ட

1995 ஏப்ரல் 18]

மக்கள் நன்றாக வாழ உழைக்கிற டாக்டர் புரட்சித் தலைவிக்கு நன்றியைச் சொல்லி, தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து டாக்டர் புரட்சித் தலைவியை யாராலும் பிரிக்கமுடியாது. டாக்டர் புரட்சித் தலைவியும், தாழ்த்தப்பட்ட மக்களும் உயிரும் உடலும் என்று சொல்லி, டாக்டர் புரட்சித் தலைவியைச் சுற்றியுள்ள சில டெம்பரரி மேகங்கள் விலகி அவதூறு சொல்பவர்கள் மூலைக்கு மூலை மக்கள் சக்தியோடு தூக்கி எறியப்பட்டு தலைகுனிவாக ஆகப் போகிறார்கள் என்ற உறுதியைச் சொல்லி, பேரணாம்பட்டுத் தொகுதியிலே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஆதிதிராவிட விவசாய மக்கள் அதிகம் வாழ்கிறார்கள், அவர்களுடைய குழந்தைகள் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து படிக்க வாழ்வில் முன்னேற, இந்த ஆண்டு ஆதிதிராவிட விடுதி துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தியாவிலேயே நம்முடைய இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவிதான் முன்னோடி திட்டங்களை ஆதிதிராவிட மக்களுக்கு தந்துகொண்டிருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். இருந்தாலும் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டு டிசம்பர் 6-ஆம் தேதி இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அதாவது ஆதிதிராவிட மாணவ மாணவியர்கள் படிப்பதற்கு உபகாரத் தொகை பெறுவதற்கு வருமான வரம்பை அந்தப் பெற்றோருக்கு ரூ. 50,000-ஆக உயர்த்தி அறிவித்தார்கள். நான் இந்த மாதம் 7-ஆம் தேதி பெங்களூரில் எஸ்.சி.,எஸ்.டி. மினிஸ்டர்ஸ் கான்பரன்சில் கலந்துகொள்கிறபோது 6-ஆம் தேதி அங்கே வருகை தந்திருக்கிற அனைத்து மாநில செயலாளர்கள் ஒரு தீர்மானத்தை மத்திய அரசுக்கு தந்திருந்தார்கள். பெற்றோர்களுடைய வருமானம் ரூ. 50,000/- ஆக உயர்த்தப்படலாம் என்று 14-ஆம் நம்பர் தீர்மானமாகத் தந்தபோது, நான் அன்றைக்கு அந்த மாநாட்டிலே நெஞ்சை நிமிர்த்தி எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே இந்தத் திட்டத்தை தந்திருக்கிறார்கள் என்று பெருமையாகப் பேசினேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது எதைச் சுட்டிக்காட்டுகிறது என்று சொன்னால், எத்தனையோ பேர் வாய்கிழியப் பேசுகிறார்கள், நம்முடைய முதல்வரைப் பற்றி குறை சொல்லி, ஆனால் அவர் செய்திருக்கிற சாதனைகளை யாரும் மறைத்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆதிதிராவிட மக்களுடைய இதயத்திலே வீற்றிருக்கிற காரணத்தினால்தான் அவர்களுடைய சிந்தனையில் உதித்த திட்டங்கள் இது. இப்படி

சிந்தனையில் உதித்த திட்டங்களை நாங்கள் மாநில மாநாட்டிலே நெஞ்சை நிமிர்த்திப் பேசுகிறோம் என்று சொன்னால், இதய தெய்வம் எங்களுக்குத் தந்திருக்கிற ஒரு வரப்பிரசாதம். அப்படிப் பேசுகிறபோது அங்கிருந்த அமைச்சர் பெருமக்கள், செயலாளர்கள் என்னுடைய பேச்சினுடைய உரையை புத்தக வடிவில் போட்டிருந்தேன்.-- எங்களுக்குத் தாருங்கள் என்று என்னிடம் நேரடியாக வந்து கேட்டபோது போதுமான அளவில் காப்பி இல்லாததால் நான் திகைத்து விட்டேன். அந்த அளவிற்கு இந்தத் திட்டங்களைத் தந்திருக்கிற இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கோரிக்கை 1995-96-ஆம் கல்வியாண்டில் அகரம் சேரியில் ஆதிதிராவிட நல மாணவியர் விடுதி திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 340, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

340—

மீன் உற்பத்தியை அதிகரிக்க பயிற்சி நிலையம் அமைத்தல்

*34480—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இறால் மீன் வளர்ப்பு மற்றும் மீன் உற்பத்தியை அதிகரிக்க பயிற்சி நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இறால் மீன் என்று ஒரு வகை இல்லை. இறால் உண்டு, மீன் உண்டு. இறாலையும் மற்றும் மீன் வளர்ப்பையும் ஊக்கப்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய ஆற்றல் மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் காரங்காடு பகுதியில்